**அ.வ.எண். 33/2014**
**பி.வா.சா.4 : தெய்வாணை**
**தேதி : 26.02.2026**
**சாட்சி முன்னிலையாகி, சத்தியபிரமாணம் செய்யப்பட்டு,**

**1ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை :–**

இல்லை.

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :–**

வாதியை நீங்கள் எந்த வருடம் தத்தெடுத்தீர்கள் என்றால் தத்தெடுக்கவில்லை. வாதியை நீங்கள் வாதியின் தாயாரிடமிருந்து பெற்றீர்களா அல்லது பெற்றோரான தாய்தகப்பனாரிடம் பெற்றீர்களா என்றால் நானும் என் கணவரும் குலதெய்வக்கோவிலுக்கு சென்றிருந்தோம் அப்போது குழந்தையை போட்டுவிட்டு சென்றார்கள் நானும் என் கணவரும் சென்றோம் அப்போது அனைவரும் அந்த குழந்தையை பார்த்துவிட்டு சென்றார்கள். என் கணவர் அந்த குழந்தையை எடுத்து வளர்க்கலாம் என்று கூறினேன். நான் வேண்டாம் என்று கூறிவிட்டு சிறிது தூரம் சென்றுவிட்டேன். அப்போது என் கணவர் என்னை திட்டி குழந்தை வீணாமல் போகிவிடும் என்று சொல்லி அந்த குழந்தைக்கு பால் கொடுத்து அந்த குழந்தையை வீட்டில் வளர்த்து வந்தேன் 2, 3 வருடங்களாக யாராவது வந்து கேட்பார்களா என்று பார்த்தேன் யாரும் வரவில்லை யாரும் 4 வயது வரை கேட்காததால் அந்த குழந்தையை பள்ளிக்கூடம் சேர்த்து துணிமணி வாங்கிக்கொடுத்து வளர்த்து வந்தோம். அந்த பையன் சரியில்லாததால் என் கணவர் அவனை மிரட்டி வந்தார் அதன்பிறகு என் கணவர் இறந்துவிட்டார் அதன்பிறகு அந்த பையன் மது அருந்திவிட்டு வீட்டிற்கு வந்து என்னை துன்புறுத்துவான். குழந்தையை எடுத்து வரும்போது எனக்கு 35 வயது மருத்துவர்கள் என்னால் குழந்தை பெற முடியாது என்று கூறவில்லை. குழந்தையை எடுத்து வந்த பிறகு தத்தெடுத்தற்காக எந்தவொரு விஷேசமும் செய்யவில்லை நான் குழந்தையை வளர்க்கத்தான் செய்தேன். எங்கள் சொந்தபந்தத்திற்கு குழந்தையை தத்தெடுத்துக்கொண்டோம் என்று

சொல்லவில்லை நான் குழந்தையை வளர்க்கத்தான் செய்தேன். சொந்தபந்தங்கள் வளர்த்த குழந்தையை எங்கள் குழந்தையென்று பார்க்கவில்லை. குழந்தையை வளர்த்துவிட வேண்டும் என்று தான் நினைத்தோம் தத்தெடுக்க நினைக்கவில்லை. குழந்தையை நான் எங்கும் அழைத்துச்செல்லவில்லை. குழந்தைக்கு எந்த விஷேசமும் நான் செய்யவில்லை. பள்ளிக்கூடத்தில் அந்த பையனை சேர்த்தபோது தந்தையின் பெயரில் என் கணவர் பெயரைத்தான் போட்டுள்ளார்கள் இல்லையென்றால் அவனை பள்ளியில் சேர்க்க இயலாது என்பதால் வாத்தியார் தான் என் கணவரின் பெயரை போட்டுள்ளார். உங்கள் கணவர் இறந்தபிறகு உங்கள் கணவரின் வாரிசு சான்றிதழில் வாதியின் பெயரை மகன் என்று சேர்த்துள்ளீர்களா என்றால் கிராமநிர்வாக அலுவலர் சேர்த்துள்ளார் நான் அதற்காக ஆட்சேபனையும் வாய்மொழியாக கிராமநிர்வாக அலுவலரிடம் கூறினேன். 1993–ல் உங்கள் மாமியாரும், உங்கள் கணவரின் சகோதரிகளிம் செய்து கொண்டு பாகப்பாத்திய பத்திரத்தில் எழுதியுள்ளார்கள் என்று சொன்னால் என் கொழுந்தியா தான் அதிலுள்ள வாசகம் அனைத்தையும் எழுதியுள்ளார் என் கணவர் அதில் கையொப்பம் செய்துள்ளார் என் கணவர் ஏன் பையன் பெயரை சேர்த்துள்ளீருக்கள் என்று சத்தம் போட்டார். உங்கள் கணவர் இறந்த பிறகு உங்கள் குடும்ப சொத்துக்கள் அனைத்தையும் வாதி தான் நிர்வாகம் செய்து வந்தார் என்று சொன்னால் என் வீட்டுக்காரர் தான் அனைத்தையும் பார்த்து கொண்டார் வாதிக்கு என்னென்ன உள்ளது என்று தெரியாது. என் கணவர் இருக்கும் வரை அவர் சொத்துக்குரிய ஆவணங்களை வைத்திருந்தார் அதன்பிறகு நான் வைத்திருக்கிறேன். வாதிக்கு சொத்துக்கள் என்ன உள்ளது என்று தெரியாது. வாதி காமாட்சி பெரியசாமி என்பவருக்கு நீங்கள் தான் திருமணம் செய்து வைத்தீர்கள் என்றால் இல்லை வாதியே காதல் செய்து திருமணம் செய்து கொண்டார் அதைப்பற்றி எனக்கு தெரியாது அந்த திருமணத்திற்கு நான் செல்லவில்லை.

வாதிக்கும், 1ம் பிரதிவாதிக்கும் பழக்கம்வழக்கம் உள்ளது ஒரே ஊர்க்காரர்கள் தான். 1ம் பிரதிவாதிக்கு வாதி நீங்கள் வளர்த்த மகன் என்று தெரியுமா என்றால் தெரியும். வாதியை 1ம் பிரதிவாதி கடத்திவிட்டார்கள் என்ற விவரம் தெரியுமா என்றால் வாதி கோயம்புத்தூரில் இருந்தார் 1ம் பிரதிவாதி வாதியை கடத்திவிட்டார் அந்த தகவல் எனக்கு கிடைத்தது வெங்கமேடு காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேன் நான் கொடுத்த புகாரை காவல்நிலையத்தில் ஏற்றுக்கொள்ளவில்லை பிரதிவாதி கொடுத்த புகாரை காவல்நிலையத்தில் ஏற்றுக்கொண்டு 1ம் பிரதிவாதியே வாதியை கூட்டிக்கொண்டு சென்றுவிட்டார். சொத்துக்களை மீட்க நடவடிக்கை எடுத்துள்ளேன். சொத்தை மீட்பதற்கு நான் வழக்கு தாக்கல் செய்து வழக்கு மூலமாக எழுதிக்கொடுத்த ஆவணம் செல்லாது என்று பரிகாரம் கோரியுள்ளேன்.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ELAVAZHAGAN

Digitally signed by ELAVAZHAGAN
Date: 2026.02.26 18:02:57 +0000

மாவட்ட நீதிபதி,
கரூர்.